குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திருவள்ளூர் மாவட்டம், காக்களூர் தொழிற்பேட்டையில் ரூ.5.64 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் பொது உற்பத்தி மைய கட்டிடம் ஆகியவற்றின் செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் குறு, சிறு மற்றும் தடுத்தா தொழில் நிறுவனங்கள் துறை அரசு செயலாளர் .வி.அருண் ராய், சிட்கோ மேலாண்மை இயக்குனர் திருமதி எஸ்.மதுமதி,மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ், தொழில் வணிக கூடுதல் இயக்குனர் ஏகாம்பரம், கண்காணிப்பு பொறியாளர் (பொ) எம்.ஆர். சோமசுந்தரம், சிட்கோ பொறியாளர்கள் தொழிற்பேட்டை கிளை மேலாளர்கள், மாவட்ட தொழில் மையம் பொது மேலாளர்கள். மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (18.05.2023) ஆணையர் அலுவலகத்தில் 48 முதுநிலை திருக்கோயில்களின் பிரசாதங்களை பக்தர்களின் இல்லங்களுக்கு அஞ்சல் துறையுடன் இணைந்து அனுப்பி வைக்கும் திட்டத்தினையும் தொடங்கி வைத்தார். உடன் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீமுரளீதரன், தமிழ்நாடு அஞ்சல் வட்டத்தின் இயக்குநர் பி.ஆறுமுகம் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

அனைத்து மாநகராட்சி ஆணையாளர்களும் தூய்மைப்பணி -

குடிநீர் விநியோகப் பணிகளை தினந்தோறும் ஆய்வு செய்திட வேண்டும்!

ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு வலியுறுத்தல்!

சென்னை, மே 19-

அனைத்து மாநகராட்சி ஆணையாளர்களும் தூய்மைப்பணி, குடிநீர் விநியோகம் உள்ளிட்ட பணிகளை தினந்தோறும் ஆய்வு செய்ய வேண்டும் என்று நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அறிவுறுத்தினார்.

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நேற்று (18.05.2023) அனைத்து மாநகராட்சிகளின் ஆணையாளர்களுடன் மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சிப் பணிகளின் நிலை குறித்த ஆய்வுக் கூட்டம் நகராட்சி நிருவாக ஆணையரக கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது:-

முதலமைச்சர் அவர்கள் ஈரக்கழிவுகளிலிருந்து தயாரிக்கப்படும் இயற்கை உரத்திற்கு "செழிப்பு" எனப் பெயரிட்டு அறிமுகப்படுத்தியும், மேலும், சீர்மிகு ஆளுமை திட்டத்தின்கீழ் "விரைவு துலங்கல் குறியீடு-QR Code" மென்பொருள் செயலியினையும் பொுமக்கள் பயன்பாட்டிற்கு வெளியிட்டுள்ளார்கள். இச்செயலி மூலம் பொுமக்கள் உள்ளாட்சி சேவைகளின் மீதான நிறைகுறைகளை தெரிவிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், சொத்து வரி உள்ளிட்ட நிலுவைகளைப் பற்றிய விவரங்களும் இச்செயலி மூலம் தெரிந்து கொள்ளலாம்.

"செழிப்பு"

பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ் பெறுவது போன்ற வசதியும் இச்செயலியில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், மாநகராட்சிகளில் உள்ள 629 இடங்களில் உள்ள நுண்ணுயிர் உரமையங்கள் மூலம் கிடைக்கப்பெறும் "செழிப்பு" உரத்தினை நுகர்வோர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இது தொடர்பான விவரங்களை மாநகராட்சி ஆணையாளர்கள் அனைத்து மக்களையும் சென்றடையும் வகையில் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

அனைத்து ஆணையாளர்களும் 2023-2024ஆம் ஆண்டிற்கு மாநகராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதிநிலைமைக்கேற்ப திட்டங்களை உடனடியாக தயார் செய்து பணிகள் துவங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மாநகராட்சிப் பகுதிகளில் கடந்த 2 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் பொுமக்களை சரியாக சென்றடைந்துள்ளதா என்பதை தொடர்ந்து ஆய்வு செய்து வரவேண்டும். மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் சாலை அமைப்புப் பணிகள், பாதாள சாக்கடை திட்டப் பணிகள், மழைநீர் வடிகால் அமைப்புப் பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் எந்தவித தொய்வுமின்றி மேற்கொள்வதை உறுதி செய்ய வேண்டும். மேலும், புதிய திட்டங்களுக்கான

கருத்துருக்கள் மற்றும் விரிவான திட்ட அறிக்கைகள் உடனுக்குடன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

அனைத்துப் பகுதிகளிலும் சீரான குடிநீர் விநியோகம் இருப்பதை உறுதி செய்வதோடு மட்டுமல்லாமல் குடிநீரின் தரத்தினை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். திடக்கழிவு மேலாண்மை செயலாக்கத்தில் பொுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் விழிப்புணர்வுப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும். நகராட்சி நிருவாகத் துறையின் சார்பில் திடக்கழிவு மேலாண்மை செயலாக்கம் தொடர்பான விழிப்புணர்வு குறும்படங்கள் வெளியிடப்பட்டுள்ளது. இக்குறும்படங்களை பொுமக்கள் அதிகம் கூடும் இடங்கள், திரையரங்குகள், உள்ளூர் தொலைக்காட்சி ஆகியவற்றில் திரையிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சீர்மிகு நகர திட்டப் பணிகள் நடைபெற்றுவரும் மாநகராட்சிகளில், நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் அனைத்து பணிகளையும் முடிக்கப்பெற்று பொுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரவேண்டும்.

வாகனங்கள்!

திடக்கழிவு மேலாண்மை செயலாக்கத்திற்குத் தேவையான வாகனங்கள் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாகனங்களின்செயல்பாடுகளை தொடர்ந்து கண்காணித்து வரவேண்டும். பொுமக்களிடையே மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை தொடர்பான விழிப்புணர்வு பணிகளை தொடர்ந்து செய்து வர வேண்டும். இப்பணிகளை அனைத்து மாநகராட்சிகளிலும் தொய்வின்றி மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை அனைத்து ஆணையர்களும் மேற்கொள்ள வேண்டும். மாநகரகப் பகுதிகளிலுள்ள பொது / சமுதாய கழிப்பறைகள் அனைத்தும் முறையாகவும், சுத்தமாகவும் பராமரிப்பதை உறுதி செய்யவேண்டும். மாநகராட்சிகளுக்குச் சொந்தமான அனைத்து முறையான கட்டிடங்களும் நல்ல முறையில் பராமரிக்கப்பட வேண்டும். மாநகராட்சிகளுக்குச் சொந்தமான காலியிடங்களை ஒரே மாதிரியான வண்ண வேலிகள் அமைத்து பாதுகாக்கப்பட வேண்டும்.

குடிநீர் இணைப்பு, கட்டிட அனுமதி, வரி விதிப்பு, பிறப்பு மற்றும் இறப்பு குறித்த விண்ணப்பத்தின் மீது துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். பொுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது தீவிர கவனம் செலுத்தி உடனடியாக தீர்வுகளை வழங்கிட வேண்டும். மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகள், மழைநீர் வடிகால் பணிகள், பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் வழங்கல், தெரு விளக்குகள் உள்ளிட்ட அனைத்துப் பணிகளும் உரிய காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும். மேலும், மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள நீர்நிலைகளை புனரமைப்பது, வரிவிதிப்பில் உள்ள குறைபாடுகளை சரி செய்வதற்கு நேரடி விசாரணைகள் மேற்கொள்வது, தூய்மைப்பணி மற்றும் குடிநீர் விநியோகம் உள்ளிட்ட பணிகளை மாநகராட்சி ஆணையாளர்கள் தினந்தோறும் ஆய்வு செய்திட வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் கூறினார்.

இக்கூட்டத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர், பெருநகர சென்னை மாநகராட்சி மரு.ஜெ.இராதாகிருஷ்ணன், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய நிருவாக இயக்குநர் இரா.கிர்லோஷ் குமார், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் வி.தட்சிணாமூர்த்தி, தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத் தலைவர் / மேலாண்மை இயக்குநர் ஆர்.அம்பலவாணன், ஐ.ஏ.ஏ.எஸ். பேரூராட்சிகள் இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிருவாக இயக்குநர் பா.பொன்னையா, பெருநகர சென்னை மாநகராட்சி இணை ஆணையர் (பணிகள்) மரு.ஜி.எஸ்.சமீரன், மற்றும் தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறியாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

குடியரசு துணைத் தலைவர் பிறந்த நாள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, மே 19 -

குடியரசுத்துணைத்தலைவர் ஜக்தீப்தன்கர் அவர்களின் பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாள் வாழ்த்து செய்தி அனுப்பியுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:

குடியரசுத் துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள்! அவர்கள் மகிழ்ச்சியோடும், நல்ல ஆரோக்கியத்தோடும், இன்னும் பல ஆண்டுகள் நம் நாட்டிற்கு அர்ப்பணிப்புடன் சேவை செய்திட வாழ்த்துகிறேன்.

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

140 வது வார்டு மாமன்ற முன்னாள் உறுப்பினர்

சைதை இரா.லோகநாதன் 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி!

காக்கும் கரங்கள் கருணை இல்லத்தில் காலை உணவு வழங்கல்!

சென்னை, மே 19 -

சென்னை மாநகராட்சி மாமன்ற முன்னாள் உறுப்பினர் சைதை இரா.லோகநாதன் 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்ச்சி 21.5.2023 - ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெறுகிறது.

சைதை இரா.லோகநாதன் இளமை பருவத்தில் கழகத்தில் ஈடுபாடு கொண்டு சைதை பகுதிக் கழகத்தில் வட்டச் செயலாளராகவும், பகுதி துணைச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழக பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மாமன்ற முன்னாள் உறுப்பினராக கழகத்தின் சார்பில் வெற்றி பெற்று தளபதி அவர்களின் நன்மதிப்பை

பெற்றும், தளபதி அவர்கள் மேயராக இருந்த பொழுது பல்வேறு பணிகளை செய்து அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

சைதை கூட்டுறவு வங்கி இயக்குனராகவும், மாந்தோப்பு ஆண்கள் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர். கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

சைதை இரா.லோகநாதனின் 8 ஆம் ஆண்டு நினைவு நாளில் காக்கும் கரங்கள் முதியோர் இல்லம் ரெயின்போ பார்டர் ரோடு, மேற்கு மாம்பலம், கருணை டிரஸ்ட் *for special child*, மேற்கு சைதாப்பேட்டையில் உள்ள கருணை இல்லத்தில் பால், பிஸ்கட், கிரீம் காலை உணவும், காசி விஸ்வநாதர் கோவிலில் மதியம் அன்னதானம் வழங்கப்படுகிறது.

இதில் வட்டக் கழக முன்னோடிகள், கழக தொண்டர்கள், குடும்பத்தினர் கலந்து கொள்கின்றனர்.

சென்னை தென் மேற்கு மாவட்டம்

திமுக இளைஞர் அணி ஆலோசனை கூட்டம்!

மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ அறிவிப்பு!

சென்னை தென்மேற்கு மாவட்ட திமுக இளைஞர் அணி ஆலோசனை கூட்டம் இன்று 19.05.2023 வெள்ளிக்கிழமை மாலை 7.00 மணி அளவில் சி.பி.ராமசாமி சாலையில் உள்ள அலுவலகத்தில் எனது தலைமையில் நடைபெற உள்ளது.

எனவே, இக்கூட்டத்தில் பகுதி செயலாளர்கள், இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்

பொருள்: கழக ஆக்கப்பணிகள்.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ.

செயலாளர், சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு - பி.டி.சி.வெ.பாலு ஆலோசனை வழங்குகின்றனர்!

வில்லிவாக்கம் மேற்கு 94 - 94 (ஆ) வட்டக் கழகங்கள் செயல்வீரர்கள் கூட்டம்!

அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ .- கூ.பீ.ஜெயின் எம்.சி.முன்னிலை! சிட்கோ சேகர் - க.சுகுமாரன் தலைமை !

சென்னை, மே 19-

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் மேற்குப் பகுதி, 94 வது வட்டக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம் இன்று (19.5.2023 வெள்ளிக்கிழமை) மாலை 6.30 மணியளவில், மண்டலக்குழுத் தலைவர் கூ.பீ.ஜெயின் அலுவலகத்தின் மேல்மாடியில் நடைபெறுகிறது.

அதேபோல 94 (ஆ) வட்டக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம் இன்று (19.5.2023 வெள்ளிக்கிழமை) மாலை 7.30 மணியளவில், ராஜமங்கலம், அம்பேத்கர் சிலை எதிரில் அமைந்துள்ள மினி ஜேம்ஸ் ஹாலில் நடைபெறுகிறது.

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாவட்டச் செயலாளர் ஆலோசனைகூட்டத்தில் கூறிய படி புதிய உறுப்பினர் சேர்த்தல், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா குறித்தும் இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளருமான பி.கே.சேகர்பாபு மற்றும் தொகுதிப் பார்வையாளர் பி.டி.சி.வெ.பாலு பங்கேற்று ஆலோசனை வழங்குகின்றனர்.

வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றிஅழகன், வில்லிவாக்கம் மேற்கு பகுதிச் செயலாளரும், 8 வது மண்டலக் குழுத் தலைவருமான கூ.பீ.ஜெயின் முன்னிலை வகிக்கின்றனர்.

வட்டச் செயலாளர்கள் சிட்கோ சேகர், க.சுகுமாரன் ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் பொுக்குழு உறுப்பினர் சாவித்திரி வீரராகவன், மாமன்ற உறுப்பினர் டி.வி.செம்மொழி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சுதா தீனதயாளன் எம்.சி, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வானவில் விஜய், ஜெ.பாலமுருகன், மாநில நிர்வாகி ஆர்.வரதன், பகுதி கழக நிர்வாகிகள் ஜெ.எஸ்.பிரபு, வி.து.ராமமூர்த்தி, பா.இளையா, கலைச்செல்வி மனோகரன், ஐ.சி.எப்.மு.சுரேஷ்பாபு, மாவட்டப் பிரதிநிதிகள் ஆர்.கோபாலகிருஷ்ணன், ம.சுந்தர் எபி, சிட்கோ பி.சுரேஷ்பாபு, அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் வழக்கறிஞர் பி.கோபிலதா, தே.ச.சுந்தர், சிட்கோ எஸ்.அன்வர்தீன், வழக்கறிஞர் மா.முரளிவினோத், வழக்கறிஞர் என்.விஜயகுமார், வழக்கறிஞர் எஸ்.சாந்தனு, டைலர் ரமேஷ், டாக்டர் எம்.ஜே.திவ்யானந்த், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் ஜி.ஜெ.பிரபு, எஸ்.எஸ்.மணிகண்டன், அனுசுயா பாண்டுரங்கன், மு.கிருஷ்ணவேணி, வெ.ராஜேஷ், எஸ்.வெற்றிவேல், ச.காளிதாசன், சண்.இரவி மற்றும் 94 வது வட்டக் கழக நிர்வாகிகள், ஜெ.கணேசன், பா.ஆறுமுகம், க.பாஸ்கர், இரா.சலீலா, ஜெ.கண்ணன், கே.ஞானசேகரன்,எ.தேவராஜ், ஜெ.செல்வராஜ், ஸ்ரீ.ஸ்ரீதர், 94 (ஆ) வட்டக் கழக நிர்வாகிகள் கோ.வி.சண்முகம், மோ.கார்த்திக், ஆர்.செல்வம், இசைமணி எபி னேசர், ப.மகேஸ்வரன், வெ.ரமேஷ்பாபு, பி.ஜே.நாகராஜ், எஸ்.ஆர்.மூர்த்த, ஆதி.குமார், தே.பிரபாகரன் மற்றும் அனைத்து அணிகளின் துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி வட்ட நிர்வாகிகள், கழக முன்னோடிகள், பாக முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாய் வட்டக் கழகச் செயலாளர்கள் சிட்கோ சேகர், க.சுகுமாரன் கேட்டுக்கொண்டுள்ளனர்.

செங்கல்பட்டு மாவட்டம், நன்மங்கலத்தில் உள்ள தமிழ்நாடு பல்லுயிர் பெருக்கம் மற்றும் பசுமையாக்குதல் திட்ட மேலாண்மை நிர்வாக அலுவலக கூட்டரங்கில், நேற்று (18.05.2023) வனத்துறை அமைச்சர் டாக்டர் மா. மதிவேந்தன் துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வு மேற்க்கொண்டார். உடன், வனத்துறை முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத்தலைவர்) சுப்ரத் மஹாபத்ர மற்றும் துறைசார்ந்த உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

2-ஆம் ஆண்டு
நினைவு அஞ்சலி
நாள் : 19.05.2023 வெள்ளிக்கிழமை
இடம் : எங்களது இல்லம், வடபெரும்பாக்கம், 17வது வட்டம், பெருநகர சென்னை மாநகராட்சி.
தெய்வத்திரு.
V.மோகனன் ICF (Retd)
தோற்றம் : 03.01.2053 / மறைவு : 19.05.2021
மு.மாவட்ட பிரதிநிதி, மாதவரம் வடக்கு பகுதி
வடபெரும்பாக்கம், 17-வது வட்டம்
என்றும் உங்கள் நினைவில்
மனைவி : M.சாந்தி மோகனன்
மகள்கள் : S.கனிமொழி B.Com., M.சந்திரசேகர் BE., MBA.,
G.அருள்மொழி B.Com., M.ஞானசேகர் B.Sc.,
மகன் : M.கலைசெல்வன் B.Com.,
சகோதரர்கள்
V.முரளி (Late) Ashok Layland (Retd)
A.V.திராவிடவீரன் MA., (A.O. Chennai Port Trust, Retd)
அவைத் தலைவர், மாதவரம் வடக்கு பகுதி
கீதா திராவிடவீரன்
V.வரதன் Sical Pvt., Ltd., தனலட்சுமி வரதன்
சகோதரிகள்
• ஜமுனா மகாலிங்கம் • பப்பி விஜயன்
மாலா அருணகிரி • மகேஸ்வரி லிங்கேசன் TNEB
• ஜெயசித்ரா B.Sc., B.Ed., மகேந்திரன் MA., M.Phil., MLIS
குடும்பத்தினர் உறவினர்கள் மற்றும் பேரன் பேத்திகள்
இவன்... R.விஸ்வநாதன் BA., HDCA.,
மாதவரம் வடக்கு பகுதி அமைப்பாளர் - தகவல் தொழில்நுட்ப அணி